1991 செப்டம்பர் 13]

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 21, திரு. ம. தனபால், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் :

21—

புதிய பேருந்து வழித்தடம்.

*227 திரு. ம. தனபால் :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தாம்பரத்திலிருந்து மாடம்பாக்கம் நூத்தஞ்சேரி வழியாக் திருப்போரூருக்குப் புதிய பேருந்து வழித்தடம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் விடப்படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 22; திரு. வி. கே. சின்னசாமி; மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

22—

ஜீவா போக்குவரத்துக் கழக கிளை அலுவலகம்.

*284 திரு. வி. கே. சின்னசாமி :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரியார் மாவட்டம், பவானிசாகர் தொகுதி, புன்செய் புளியம்பட்டியில் ஜீவா போக்குவரத்துக் கழகத்தின் கிளை அலுவலகம் தொடங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?